




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








திங்கள் ❖ மே. 29, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 234 ❖ ரூ.10


## புதிய நாடாளுமன்றத்தை திறந்து வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி

# பாரம்பரியம்

### 64,500 சதுர மீட்டர் பரப்பில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்றம் நாட்டின் பன்முகத்தன்மையைப் போற்றும் நோக்கில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் பொருட்கள் வாங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது.

**புதுடெல்லி, மே. 29–**

**புதியநாடாளுமன்றத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார்.**



புதிய நாடாளுமன்றத் திறப்புவிழாநாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது. முதலில், கணபதி ஹோமம் நடத்தப்பட்டது. இதில், பிரதமர் நரேந்திர மோடி, சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் கலந்து கொண்டனர். இதையடுத்து, நாடாளுமன்றத்தில் செங்கோலை நிறுவும் நிகழ்வு நடைபெற்றது. விழா மண்டபத்திற்குக் கொண்டு வரப்பட்ட செங்கோலுக்கு முறைப்படி பூஜைகள் செய்யப்பட்டன. திருவாவடுதுறை ஆதீனம் உள்ளிட்ட பல்வேறு சைவ மடங்களைச் சேர்ந்த ஆதீனங்கள் முன்னிலையில் வேத மந்திரங்கள் ஓத, தேவாரம் பாடசெங்கோலுக்குபூஜை செய்யப்பட்டது. மேலும், அனைத்து ஆதீனங்களும் செங்கோலுக்கு புனித நீர் தெளித்து மலர் தூவி மரியாதை செய்தனர். அப்போது, புனித செங்கோல் முன்பாக பிரதமர் நரேந்திர மோடி விழுந்து வணங்கினார்.

இதையடுத்து, வேத மந்திரங்கள் ஓத, தேவாரம் பாட, மங்கள இசை இசைக்க தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், மதுரை ஆதீனம், பேரூர் ஆதீனம், வேளாக்குறிச்சி ஆதீனம் உள்ளிட்ட ஆதீனங்கள் புனித செங்கோலை பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கினார்கள். புனித செங்கோலை கைகளில் ஏந்தியவாறு நாடாளுமன்ற மக்களவைக்குள் சென்ற பிரதமர் மோடி, அங்கு சபாநாயகரின் இருக்கைக்கு அருகில் செங்கோலை நிறுவினார். அப்போது சபாநாயகர் ஓம் பிர்லாவும் உடன் இருந்தார்.

இதையடுத்து, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை சபாநாயகர் ஓம்பிர்லா முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இவ்விழாவில் மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள் உள்பட பலர் பங்கேற்றனர். இதையடுத்து, நாடாளுமன்றக் கட்டிடத்தைக் கட்டுவதற்கானகட்டுமானப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு சால்வை அணிவித்து நினைவுப் பரிசு அளித்து பிரதமர் மோடி கவுரவித்தார். இதன் தொடர்ச்சியாக சர்வமத பிரார்த்தினை நடைபெற்றது.

இதனையடுத்து, புதிய நாடாளுமன்றத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றார். அப்போது அவையில் இருந்தவர்கள் மோடி மோடி என உற்சாக குரல் எழுப்பினர். புதிய நாடாளுமன்றக் கட்டிடம் அதிகாரமளிக்கும் தொட்டிலாக திகழும் என பிரதமர் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றக் கட்டிடம் திறக்கப்பட்டதை அடுத்து தனதுட்விட்டர் பக்கத்தில் பதிவு வெளியிட்ட அவர், "நாடாளுமன்றத்தின் புதிய கட்டிடம் திறக்கப்படுவதால், நமது இதயங்களும் மனங்களும் பெருமை, நம்பிக்கை மற்றும் வாக்குறுதியால் நிரம்பியுள்ளன. நாடாளுமன்றக் கட்டிடம் எனும் இந்த சின்னம், அதிகாரமளிக்கும் தொட்டிலாக இருக்கட்டும்; கனவுகளை காணச் செய்து அவற்றை நனவாக்கட்டும். இது நமது மகத்தான தேசத்தை முன்னேற்றத்தின் புதிய உயரங்களுக்கு கொண்டு செல்லட்டும்" என தெரிவித்துள்ளார்.

பழையநாடாளுமன்றக் கட்டிடம் 1927ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 96 ஆண்டுகள் பழமையான இந்த கட்டிடத்தில் தற்போதைய தேவைக்கேற்ப போதுமான இட வசதி இல்லாததால், புதிய நாடாளுமன்றத்தைக் கட்டுமாறு மக்களவை மற்றும் மாநிலங்களவை சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தைக் கட்ட முடிவு செய்த மத்திய அரசு, அதற்கான அடிக்கல்லை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2020ம் ஆண்டு டிசம்பர் 10ம் தேதி நாட்டினார்.

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தைக் கட்டும் பணி டாடா ப்ராஜக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு சாதனை கால அளவில் முடிக்கப்பட்டது. புதிய நாடாளுமன்றம் நாட்டின் பன்முகத்தன்மையைப் போற்றும் நோக்கில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் பொருட்கள் வாங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது.

புதிய நாடாளுமன்றம் முக்கோண வடிவில் கட்டப்பட்டுள்ளது. 4 மாடிகளைக் கொண்டது. நாடாளுமன்றத்தின் கட்டிட பரப்பளவு 64,500 சதுர மீட்டர். இந்த கட்டிடம் ஞான வாயில், சக்தி வாயில், கர்ம வாயில் என மூன்று வாயில்களைக் கொண்டுள்ளது. விஐபி–க்கள், எம்பிக்கள், பார்வையாளர்கள் செல்வதற்கு தனித்தனி வாயில்கள் இருக்கும்படி வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற மக்களவை 888 இருக்கைகள் கொண்டதாகவும், மாநிலங்களவை 300 இருக்கைகள் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் நடைபெறும்போது மக்களவையில் ஆயிரத்து 280 பேர் அமரக்கூடிய வகையில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

---

## மல்யுத்த வீராங்கனைகள் கைது

# செங்கோல் முதல் நாளே வளைந்துவிட்டது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்

சென்னை, மே.29–

புதிய நாடாளுமன்றம் நோக்கி பேரணியாக வந்து போராட்டத்தில் ஈடுபட முயன்ற மல்யுத்த வீராங்கனைகளை போலீசார் கைது செய்தனர்.



பாலியல் புகாரில் சிக்கியுள்ள இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் தலைவரும், பாஜக எம்.பி.யுமான பிரிஜ் பூஷன் சிங்கை கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் மல்யுத்த வீராங்கனைகள், வீரர்கள் டெல்லி ஜந்தர் மந்தரில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே, புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார். நாடளுமன்றதிறப்புவிழாவன்று "மஹிளா மகாபஞ்சாயத்" என்ற பெயரில் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் போராட்டம் நடத்த முடிவெடுத்தனர்.

நாடாளுமன்றம் நோக்கி மல்யுத்த வீரர், வீராங்கனைகள் பேரணியாக செல்ல முயற்சித்தனர். ஆனால் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் போராட்டம் நடத்த போலீசார் அனுமதி மறுத்த நிலையில் தடையை மீறி மல்யுத்த வீராங்கனைகள், வீரர்கள் பேரணியாக சென்றனர். அப்போது, தடையை மீறி சென்ற அவர்களை போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் காங்கிரஸ் உள்பட முக்கிய கட்சிகள் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் கைது செய்யப்பட்டதற்கு தமிழ்நாடு முதல்-அமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் புகார் சொல்லிப் பல மாதங்கள் ஆகிவிட்டன. அவர் மீது இதுவரை அக்கட்சியின் தலைமை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மல்யுத்த வீராங்கனைகள் தொடர்ந்து தலைநகரில் போராடி வருகிறார்கள். இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின்போது, போராட்டம் நடத்திய அவர்களை இழுத்துச் சென்றும் - தூக்கிச் சென்றும் கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது. செங்கோல் முதல் நாளே வளைந்துவிட்டது என்பதையே இது காட்டுகிறது. குடியரசுத் தலைவரையே புறந்தள்ளி, அனைத்து எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்புக்கும் ஆளாகி நடைபெறும் திறப்புவிழா நாளில் அராஜகமும் அரங்கேறுவதுதான் அறமா?' என தெரிவித்துள்ளார்.

---

# அறந்தாங்கி அருகே கோவில்பட்டியில் வடமாடு மஞ்சுவிரட்டு அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்

அறந்தாங்கி, மே.29–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே கோவில்பட்டி கிராமத்தில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி கூத்தபெருமாள் ஆலய குதிரை திடலில் நடைபெற்றது. ஆறாம் ஆண்டாக நேற்று நடைபெற்ற போட்டியை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றுத் துறை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்



இதில் புதுக்கோட்டை மாவட்டம் மட்டும் இன்றி திண்டுக்கல், தேனி, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 12 காளைகளும் அதே போன்று பல்வேறு மாவட்டங்களில் இருந்து 108 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர்.

இந்த வடமாடு மஞ்சுவிரட்டில் மந்தையின் நடுவே நீளமுள்ள கயிற்றில் ஒரு காளைமாடு கட்டிவிட்டு அதை அடக்க ஒன்பது பேர் கொண்ட மாடுபிடி வீரர்களையும் களத்தில் இறக்கவிட்டு 25 நிமிடம் நேரம் ஒதுக்கி போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாடுபிடி வீரர்களுக்கு போக்கு கட்டிய காளைகளை மாடு பிடி வீரர்கள் லாபமாக பிடித்து வெற்றி பெற்றனர்.

சில காளைகள் மாடுபிடி வீரர்கள் கையில் சிக்காமல் போக்கு காட்டி சென்றது இதில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

வடமாடு மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிகள் அறந்தாங்கி வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் திமுக மாநில செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர். கே.கலைமணி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் ACN கேட்டரிங் சர்வீஸ் பாலு உள்ளிட்டோர் கலந்து கொண்ட நிலையில், வடமாடு மஞ்சுவிரட்டு போட்டிக்கு வந்திருந்த அனைத்து காளைகளுக்கும் மாலை மரியாதை செய்யப்பட்டு மாட்டின் உரிமையாளர்களுக்கு கட்டில் அண்டா சேர் போன்றவைகள் பரிசாக வழங்கப்பட்டன. இந்த போட்டியினை சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமானோர் சுற்றி அமர்ந்து ஆரவாரத்துடன் கைதட்டி உற்சாகத்துடன் கண்டுபிடித்தனர், அறந்தாங்கி காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

---

# புதுக்கோட்டை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மரம் நடு விழா

புதுக்கோட்டை , மே.29–

புதுக்கோட்டை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் நிலைய முதல்வர் குப்புராஜ் தலைமையில் மரம் அறக்கட்டளை நிறுவனர் மரம் இராஜா ஏற்பாடில் மரம் நடுவிழா நடைபெற்றது. நிகழ்வில் புதுக்கோட்டை கோட்டாட்சியர் முருகேசன் மாசு கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் செல்வகுமார், நத்தம் பண்ணை ஊராட்சி தலைவர் பாபு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு டாட்டா டெக்னாலஜி சென்டர் வளாகத்திற்குள் 125 மரக்கன்றுகளை நடவு செய்தார்கள்.



முதல் மரக்கன்றை கோட்டாட்சியர் முருகேசன் நடவுசெய்து துவக்கிவைத்தார். இதில் மாணவ, மாணவிகள் புதுக்கோட்டையை பசுமைக்கோட்டையாக்குவோம், பசுமைத்தமிழகம் படைத்திடுவோம், புவி வெப்பமயமாதலை தடுத்திடுவோம், மரங்களை அதிக அளவில் நடவுசெய்து மாசற்ற காற்றையும் நீரையும் உருவாக்குவோம், பாதுகாப்போம் வளர்த்தெடுப்போம் நெகிழிப்பையை தவிர்த்திடுவோம், மஞ்சள் துணிப்பையை பயன்படுத்துவோம் என்ற உறுதிமொழியையும் எடுத்துக்கொண்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் சுற்றுச்சூழல்துறையின் சார்பில் மஞ்சள் பை வழங்கப்பட்டது. நிகழ்வில் இருபால் பயிற்றுநர்கள் பயிற்சியாளர்கள் மற்றும் பல்வேறு சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நிகழ்ச்சி ஏற்பாடுகளை நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் ஜோதிமணி செய்திருந்தார்.

---

# கரூர் வருமான வரித்துறை சோதனையில் ஆவணங்கள், ரூ. 3.5 கோடி பறிமுதல்?

கரூர் , மே.29–

கரூர் வருமான வரித்துறைசோதனையில் ஆவணங்கள் மற்றும் ரூ. 3.5 கோடி பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.



மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜியின் தம்பி அசோக்குமார், அவரது உறவினர்கள், நண்பர்கள், ஒப்பந்ததாரர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் வீடுகள், அலுவலகங்கள், குவாரிகள் உள்ளிட்ட இடங்களில் சோதனை நடத்துவதற்காக கடந்த 26ம் தேதி வருமான வரித்துறையினர் வருகை தந்தனர்.

சோதனைக்கு சென்ற இடங்களில் அவர்களின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அதிகாரிகள் பாதுகாப்பு கேட்டு எஸ்.பி. அலுவலகம் சென்றனர். இதனால் சோதனை மாலை வரை நிறுத்தப்பட்டது. அதன் பிறகு 6 இடங்களில் மாலை முதல் சோதனை நடைபெற்றது. கோவையில் இருந்து சிஆர்பிஎப் வீரர்கள் 100க்கும் மேற்பட்டனர் வந்தனர். அன்று இரவு துணைமேயர் சரவணன் வீட்டிற்கு சோதனைக்கு சென்ற வருமான வரித்துறையினர், வீட்டுக்குசீல் வைத்தனர். அவரது ஆதரவாளர்கள் எதிர்ப்பால் சீல் அகற்றப்பட்டது.

கொங்கு மெஸ் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று முந்தினம் நடந்த சோதனையில் சோதனை முடிவடையாததால் கொங்கு மெஸ் மற்றும் அலுவலகத்திற்கு சீல் வைக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று (மே 28ம் தேதி) கரூர் ராயனூர் தீரன் நகரில் உள்ள கரூர் மாநகராட்சி துணை மேயர் ப.சரவணன், அதே பகுதியில் அமைந்துள்ள சோடா நிறுவன உரிமையாளர் மணிகண்டன் வீடு, ராயனூர் சன் நகரில் அமைந்துள்ள செல்லமுத்து வீடு, வடக்கு காந்திகிராமத்தில் அமைந்துள்ள பிரேம்குமார், வையாபுரி நகரில் அமைந்துள்ள நிதி நிறுவனம், கரூர் கோவை சாலையில் உள்ள சக்தி மெஸ் உணவகம், பவித்திரம் பகுதியில் உள்ள ரெடிமிக்ஸ் நிறுவனம் ஆகிய இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது. பல்வேறு இடங்களில் நடந்த சோதனையில் முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், கணக்கில் வராத ரூ.3.5 கோடி பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

---

# தமிழ் மற்றும் சமஸ்கிருத மந்திரங்களை உச்சரித்து ஆலயங்களில் வழிபாடு நடத்தி வரும் ரஷ்ய தம்பதியினர்

தரங்கம்பாடி, மே. 29–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா நல்லாடை கிராமத்தில் சோழர்களால் உருவாக்கப்பட்ட 900 வருஷம் பழமை வாய்ந்த அக்னீஸ்வரர் அமைந்துள்ளது. இக்கோயிலில் ரஷ்யாவைச் சார்ந்த அலெக்ஸ்கே - மேயா தம்பதியினர் சிறப்பு வழிபாடு செய்தனர். இவர்கள் ரஷ்யாவில் மென் பொருள் பணியாளர்களாக பணியாற்றி வருகின்றன மென்பொருள் பணியாளராக வேலை பார்த்து வந்தாலும் இந்தியா மற்றும் தமிழ் கலாச்சாரம் ஆகியவற்றை கேள்விப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சுற்றுலா வந்தனர்.



வருடம் தோறும் விடுமுறை நாட்களில் தமிழகத்திற்கு வருகை தந்து ஆலயங்களில் வழிபாடு நடத்துவது வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்களது மூன்று வயது மகளுடன் திருக்கடையூர், திருநள்ளாறு, வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு, திருவிடைக்கழி ஆகிய ஆலயங்களில் தரிசனம் செய்துவிட்டு நல்லாடை அக்னீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு மேற்கொண்டனர்.

ஆலய பிரகாரங்களில் இந்து முறைப்படி வழிபாடு செய்து, கருவறை முன்பு தியானத்தில் அமர்ந்து மகா மிருத்திஞ்சயமந்திரம், நவகிரக காயத்ரி மந்திரங்கள் முருகன் தன்வந்திரி உள்ளிட்ட மூல மந்திரங்கள் ஆகியவற்றை கண்ணை மூடி தெளிவான உச்சரிப்புடன் வேதம் படித்த சாஸ்திரிகளுக்கே டப் கொடுக்கும் வகையில் உச்சரித்து வழிபாடு நடத்தியது பக்தர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ரஷ்ய தம்பதிகளுக்கு ஆலய நிர்வாகம் சார்பில் பரிவட்டம் கட்டி வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் கோயில் அறங்காவலர் மணிவண்ணன், நாடி ஜோதிடர் கோபிநாத் மற்றும் கோயில் நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

உன்னை வீழ்த்தும் அளவிற்கு
விதிகள் எழுதப்பட்டிருந்தால்,
விதிகளை வீழ்த்தும் அளவிற்கு
வழிகளும் நிறுவப்பட்டிருக்கும்!
தளறாதே!
துணிந்து செல்!




புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்

ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்

தங்க நகை தயாரிப்பாளர்கள்

TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை – 1

Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,665 | Rs. 6,141 |


# பவானிசாகரில் தொடர்ந்து அட்டகாசம் செய்யும் மக்னா யானை கும்கிகளை கொண்டு விரட்ட கோரிக்கை

சத்தியமங்கலம் மே 29

பவானிசாகரில் தொடர்ந்து அட்டகாசம் செய்யும் மக்னா யானை கும்கிகளை பயன்படுத்தி விரட்ட கோரிக்கை விடுத்துள்ளனர். பவானிசாகர் அணை முன் பகுதியில் உள்ள அனைத்து பூங்கா மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான ஓட்டுனர் பயிற்சி பள்ளி பகுதிகளில் தினமும் இரவில் காட்டு யானை நடமாட்டம் அதிகரித்துள்ளது. பவானிசாகர் அணையை ஒட்டி உள்ள விளாமுண்டி வனப்பகுதியில் இருந்து வெளியேறும் மக்னா யானை அணை முன்புறமுள்ள பூங்காவின் காம்பவுண்ட் சுவரை உடைத்து தள்ளியதோடு அரசு போக்குவரத்து கழக ஓட்டுனர் பயிற்சி பள்ளியின் முன்புற இரும்பு கேட் மற்றும் காம்பவுண்ட் சுவரை சேதப்படுத்தியது.

இந்த யானை தினமும் இரவில் பவானிசாகர் நகர் பகுதியில் முகாமிட்டு அணை பூங்கா பகுதியில் பொது மக்களை அச்சுறுத்தி வருகிறது. இதை அடுத்து



இந்த மக்னா யானையை விரட்டுவதற்காக வனத்துறை ஊழியர்கள் ஏழு பேர் கொண்ட குழுவினர் தினமும் இரவில் ரோந்துப் பணி மேற்கொண்டு வருகின்றனர். பவானிசாகர் நகர் பகுதியில் நடமாடும் காட்டு யானை தந்தம் இல்லாத மக்னா யானை என வனத்துறையினர் உறுதிப்படுத்தி உள்ளனர். மேலும் போலீஸ் குடியிருப்பு எதிரில் உள்ள விவசாய தோட்டத்திற்குள் புகுந்து தோட்டத்து வீட்டின் மேற்கூரையை சேதப்படுத்தியது. அப்போது யானை கண்டு ஓடிய விவசாயி சுப்பையன் என்பவர் காயமடைந்தார். தினமும் இரவில் வனத்துறையினர் வந்து சென்றாலும் மக்னா யானை நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறி வருகின்றனர்.

கடும் வறட்சி காலத்தில் காட்டு யானைகள் குடிநீர் மற்றும் தீவனம் தேடி வனப்பகுதி வெளியேறும் சூழ்நிலையில், தற்போது பவானிசாகர் பகுதியில் நல்ல மழை பெய்து வனப்பகுதி பசுமைக்கு திரும்பியுள்ளதால் யானைகளுக்கு குடிநீர் மற்றும் தீவனப் பிரச்சினை தீர்ந்துள்ள நிலையில் காட்டு யானைகள் விவசாயிகள் பயிரிட்டுள்ள வாழை மரங்களை ருசித்து பழகியதால் தற்போது வனப்பகுதி பசுமைக்கு திரும்பியும், காட்டு யானைகள் வனப்பகுதிக்குள் செல்லாமல் விவசாய பயிர்களை தின்பதிலேயே ஆர்வம் காட்டுவதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

பவானிசாகர் நகர் பகுதியில் ஊருக்குள் புகுந்து அரசு துறையின் கட்டிடங்களை சேதப்படுத்தி வரும் மக்னா யானையை கும்கி யானைகளை பயன்படுத்தி பிடித்து வேறு பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொடைக்கானல் மலர் கண்காட்சிக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளதால் மேலும் 2 நாட்கள் நீட்டிப்பு

திண்டுக்கல் மே 29

கொடைக்கானல் மலர் கண்காட்சிக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளதை அடுத்து மேலும் 2 நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளது. மலர் கண்காட்சி 3 நாட்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் மேலும் 2 நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளது.



மே 30-ம் தேதி வரை கொடைக்கானல் மலர் கண்காட்சி நடைபெறும் என்று தோட்டக்கலைத்துறை அறிவித்துள்ளது.




கார்த்திக் மெஸ்

உயர்தர அசைவ உணவகம்

Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்

சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்

புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்

புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை

செல் : 94426 42437


# வேலூர் சிறைகளில் நாள்தோறும் கைதிகளுக்கு விளையாட்டு பயிற்சி சிறை அதிகாரிகள் தகவல்

வேலூர் மே 29

வேலூர் சிறைகளில் நாள்தோறும் கைதிகளுக்கு விளையாட்டு பயிற்சி அளிக்கப்படுவதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழ்நாட்டில் உள்ள மத்திய சிறைகளில் உள்ள கைதிகள் சிறைக்குள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சுதந்திரமாக உலா வர அனுமதிக்கப் படுகின்றனர். அந்த நேரத்தில் உடல் உழைப்பில் பலர் கவனம் செலுத்தி, சம்பளம் பெறுகின்றனர். இன்னும் சிலர் உடல் மற்றும் மனதை நல்வழிப்படுத்தும் பயிற்சிகளில் கவனம் செலுத்துகின்றனர். இந்நிலையில், சிறைத்துறை டிஜிபியாக அம்ரேஷ் பூஜாரி பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு முழுவதும் உள்ள மத்திய சிறைகளில் ஆய்வு செய்து, கைதிகளின் கோரிக்கைகளை நேரில் கேட்டறிந்தார். அப்போது, கைதிகள் வாசிப்பு திறனை அதிகரிக்கும் புதிய புத்தகங்களை சிறையில் உள்ள நூலகத்திற்கு வாங்கி தர வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.



இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்களில் நடைபெற்ற புத்தக கண்காட்சி மற்றும் திருவிழாக்களில் சிறைகளில் நூலகம் அமைப்பதற்காக ‘கூண்டுக்குள் வானம்’ என்ற பெயரில் அரங்கம் அமைக்கப்பட்டு புத்தகம் தானமாக பெறப்பட்டது. இந்த கண்காட்சிகளின் மூலம் சிறை நூலகங்களுக்கு சுமார் 1 லட்சம் புத்தகங்கள் பொதுமக்கள், எழுத்தாளர்கள் தானமாக வழங்கினர். மேலும் கைதிகளின் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் வகையில், நூலகங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட ₹2.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி சமீபத்தில் வெளியான பிளஸ்2 பொதுத்தேர்வு முடிவுகளில் 87.5 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், சிறைகளில் உள்ள கைதிகளின் மன நலனிற்காக புத்தகம் வாசிப்பை தொடர்ந்து, உடல் நலனிற்காக விளையாட்டு போட்டிகள் நடத்தப்படும் என சிறைத்துறை டிஜிபி அமரேஷ் பூஜாரி தெரிவித்தார். இதை தொடர்ந்து, கடந்த ஏப்ரல் மாதம் சென்னை புழல் சிறையில் கைதிகளுக்கான விளையாட்டு போட்டிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதையடுத்து மத்திய சிறைகளில் கைதிகளின் விளையாட்டு போட்டிகளுக்கு தேவையான உபகரணங்கள் வாங்கப்பட்டது.

அதன்படி, வேலூர் மத்திய சிறை மற்றும் பெண்கள் சிறையில் கைதிகளுக்கு இடையே விளையாட்டு போட்டிகளை டிஐஜி செந்தாமரைகண்ணன், கண்காணிப்பாளர் அப்துல்ரகுமான் ஆகியோர் கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கி வைத்தனர். இதில் ஆண்கள் மத்திய சிறையில் வாலிபால், இறகுப்பந்து, கேரம் போட்டிகளும், பெண்கள் சிறையில் கேரம், இறகுப்பந்து உள்ளிட்ட போட்டிகளும் நடத்தப்படுகிறது.

இது குறித்து சிறைத்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘குற்றங்களை செய்து விட்டு சிறைக்கு வரும் கைதிகளுக்கு, சிறைக்குள் பல்வேறு தொழில் பயிற்சி வழங்கி, தண்டனை காலம் முடிந்து சிறையை விட்டு வெளியே வரும்போது, அவர்கள் தொழில் தொடங்குவதற்கான பயிற்சிகளும், கடனுதவி வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது, சிறை கைதிகளுக்கு கணினி பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் கைதிகளுக்கு இடையே விளையாட்டு போட்டிகள் நடக்கிறது. இதற்காக மாலை நேரங்களில் கைதிகளுக்கு விருப்பமுள்ள வாலிபால், கேரம், இறகுப்பந்து ஆகிய விளையாட்டுகளில் பங்கேற்று வருகின்றனர். இது கைதிகளுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது’ என்று கூறப்பட்டனர்.

# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் 10ம் மற்றும் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா

தென்காசி மே 29

தென்காசி மாவட்டம்-கடையநல்லூர் சிராஜுல் மில்லத் அறக்கட்டளை சார்பில் இப்பால் நகரில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொது தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று மூன்று இடங்களை பிடித்த கடையநல்லூர் நகரில் உள்ள 11 கல்விக்கூடங்களில் பயின்ற 72 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு விழாவும் விருது வழங்கும் விழாவும் ஜபருல்லாகான் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தென்காசி முதன்மை கல்வி அதிகாரி ராஜேஸ்வரி அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளையும் விருதுகளையும் வழங்கி கௌரவித்தார்.



இந்நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களால் வாழ்த்து பெற்ற மாணவி சப்ரீம் இமானாம் கடையநல்லூரைச் சேர்ந்தவராவார் அவர்களையும் கௌரவிக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர் சேயான், இபுறாகீம், தென்காசி மாவட்ட காழி முகைதீன் ஹஜ்ரத், மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர் கேப்டன் செய்யது சுலைமான், பொருளாளர் இப்றாகீம் வி.எ.எம். இக்பால், ஆடிட்டர் உஸ்மான் அலி, பிரின்ஸ் மருத்துவர் சஞ்சீவி, ஹாஜாமைதீன், முஹம்மது கோயா, ரஹ்மத்துல்லா, செய்யது அலி ,பாத்திமா, சேகுதுமான், முஹம்மது அலி, எம்சிசேக்மைதீன், சாகுல்கமீது, அப்துல் காதர், உதுமான், சுல்தான், பேட்டை ஜபருல்லா, திவான் மசூது, சேகனா, மஸ்தான், கோதாரி, இக்பால், செய்யது முஹம்மது, ஹஸ்புல்லாஹ் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## பொய்யாத நல்லூர் கிராமத்தில்

# சட்டவிரோதமாக மது விற்பனை பாரதிய ஜனதா கட்சி குற்றச்சாட்டு



அரியலூர், மே.29-

பொய்யாத நல்லூர் கிராமத்தில் சட்டவிரோதமாக மது விற்பனை செய்யப்படுவதாக, பாரதிய ஜனதா கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அரியலூர் மாவட்டம், அஸ்தினாபுரம் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்ற, அரியலூர் வடக்கு ஒன்றிய பாரதிய ஜனதா கட்சியின் மண்டல செயற்குழு கூட்டத்துக்கு, கட்சியின் அரியலூர் வடக்கு மண்டல நிர்வாகி பொய்யாத நல்லூர் தங்கவேலு தலைமை வகித்தார், அஸ்தினாபுரம் செம்பையன் வரவேற்றார், திருமானூர் விருத்தாசலம், அரியலூர் வழக்கறிஞர் டி.ஏ.பி செந்தில்குமார், மாவட்ட பட்டியல் அணித் தலைவர் குப்புசாமி, மாவட்டச் செயலாளர் எம். அண்ணாதுரை, எஸ் ஆர் எம் நிவாஸ், பொன் சேகர், உள்ளிட்டோர் பேசிய இக்கூட்டத்தில், கட்சியில் மாவட்டத் தலைவர் ஐயப்பன் சிறப்புரை ஆற்றினார்.

கயர்லாபாத் செல்லும் முக்கிய சாலையை சீரமைக்க வேண்டும், ஜல்சக்தி திட்டத்தின் கீழ் பணம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள், அதனை தடுத்து நிறுத்த வேண்டும். பொய்யாத நல்லூர் கிராமத்தில் பொதுமக்களுக்கு போதிய குடிநீர் கிடைக்கவில்லை, ஆனால் சட்ட விரோதமாக மது பாட்டில்கள் விற்பனை செய்யப்படுகிறது, இதனை மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில், பாரதிய ஜனதா கட்சியின் மாவட்டத் தலைவி அனிதா, வழக்கறிஞர் தனலட்சுமி, பொய்யாதநல்லூர் சுந்தரம், பட்டியல் அணி நிர்வாகிகள் வெங்கடேஸ்வரன், ரவி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர், முடிவில் கிளைத் தலைவர் அறிவழகன் நன்றி கூறினார்.

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக

# சஞ்சய் விஜய்குமார் கங்காபூர்வாலா நேற்று பதவிஏற்றுக் கொண்டார்



சென்னை மே 29

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக சஞ்சய் விஜய்குமார் கங்காபூர்வாலா நேற்று பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த முனீஸ்வரர்நாத் பண்டாரி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பணி ஓய்வு பெற்றார். இதனைத் தொடர்ந்து மூத்த நீதிபதிகள், எம்.துரைசாமி, டி.ராஜா ஆகியோர் பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்து பணி ஓய்வு பெற்றனர். கடந்த 8 மாதங்களாக தலைமை நீதிபதி பணியிடம் நிரப்பப்படமால் இருந்தது.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற கொலீஜியம் கடந்த ஏப்ரல் 19-ம் தேதி மும்பை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த எஸ். வி.கங்கா பூர்வாலாவை, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்க மத்திய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் பரிந்துரை செய்தது. இந்த பரிந்துரையை ஏற்ற குடியரசு தலைவர், எஸ். வி.கங்கா பூர்வாலாவை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, தலைமை நீதிபதியாக இன்று கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் எஸ்.வி.கங்கா பூர்வாலா பதவி எற்றுக் கொண்டார். அவருக்கு தமிழக ஆளுநர் ஆர். என். ரவி பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ், கொல்கத்தா உயர்நீதிமன்றம் தலைமை நீதிபதி டி.எஸ்.சிவஞானம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ். வைத்தியாநாதன், ஆர். மகாதேவன் உள்ளிட்ட நீதிபதிகள், அமைச்சர்கள் துரைமுருகன், ரகுபதி, உதயநிதி ஸ்டாலின், கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன், மா.சுப்பிரமணியம், சபாநாயகர் அப்பாவு, தலைமைச் செயலாளர், தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர்கள், மத்திய, மாநில அரசு அதிகாரிகள், மூத்த வழக்கறிஞர்கள், எதிர்கட்சி துணை தலைவர் ஓ. பன்னீர் செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.



▶ மயிலாடுதுறை மவட்டம் சீர்காழியில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான தாடாளன்பெருமாள் எனும் திருவிக்கிரம நாராயணபெருமாள் கோயில் உள்ளது. இக்கோயிலில் லோகநாயகி தாயாருடன் பெருமாள் காட்சி தருகிறார். இங்கு வருடாந்திர பிரம்மோற்சவம் கடந்த 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவில் முக்கிய நிகழ்வாக தங்க கருடசேவை நடைபெற்றது. முன்னதாக பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம்,சாத்துமுறை செய்விக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.தொடர்ந்து தங்க கருட வாகனத்தில் சிறப்பு புஷ்ப அலங்காரத்தில் பெருமாள் எழுந்தருளி மகாதீபாராதனை காட்டப்பட்டு வீதியுலா நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

# நாடு முழுவதும் நேற்று ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ் உள்ளிட்ட சிவில் சர்வீஸ் பணிக்கு முதல் நிலை தேர்வு நடைபெற்றது

சென்னை மே 29

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ் உள்ளிட்ட சிவில் சர்வீஸ் பணிக்கான முதல்நிலை தேர்வு நேற்று நடைபெற்றது. இந்தியா முழுவதும் 7 லட்சம் பேர் இத்தேர்வை எழுதுகின்றனர். மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) ஆண்டுதோறும் ஐஏஎஸ், ஐபிஎஸ், மற்றும் ஐஆர்எஸ் உள்ளிட்ட 21 வகையான பதவிகளுக்கான தேர்வுகளை நடத்தி வருகிறது. இந்த ஆண்டுக்கான சிவில் சர்வீஸ் பணியில் அடங்கிய 1,105 பதவிகளை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த பிப்ரவரி



1ம் தேதி அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து பிப்ரவரி 21ம் தேதி வரை விண்ணப்பிக்க கால அவகாசம் விதித்தது. இத்தேர்வுக்கு இந்தியா முழுவதும் இருந்து சுமார் 7 லட்சம் பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர்.

இதில், தமிழகத்தில் மட்டும் சுமார் 50 ஆயிரம் பேர் வரை தேர்வு எழுத அனுமதிக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்கான முதல் நிலை தேர்வு நேற்று மே 28 நடைபெறும் என்று யுபிஎஸ்சி அறிவித்திருந்தது. அதன்படி சிவில் சர்வீஸ் பணிக்கான முதல்நிலை தேர்வு இந்தியா முழுவதும் 73 நகரங்களில் நேற்று நடைபெற்றது. தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, வேலூர் ஆகிய 5 நகரங்களில் நடந்தது. காலை 9.30 மணி முதல் காலை 11.30 மணி வரை பொது அறிவு தேர்வும், மதியம் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை திறனறிவு தேர்வும் நடந்தது. தேர்வு நடைபெறும் அனைத்து மையங்களிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு வைக்கப்பட்டது.

29.05.2023 வரலாறு

### சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட சிதம்பரம் சாலையில் உள்ள

# அரியப்பிள்ளை குளம் கலைஞரின் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் குளம் தூர்வாரி சீரமைக்கும் பணி



சீர்காழி, மே. 29 –

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட சிதம்பரம் சாலையில் உள்ள அரியப்பிள்ளை குளம்கலைஞரின் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ ஒரு கோடியே 11லட்சம் மதிப்பீட்டில் குளம் தூர்வாரிசீரமைக்கும்பணி நடைபெற்று வருகிறது.

இந்த பணியினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அமுதவல்லி நேற்று நேரில் பார்வையிட்ட ஆய்வு செய்தார். பணிகளை தரமாக விரைந்து முடிக்க கேட்டுக் கொண்டார். அதனை தொடர்ந்து சீர்காழி ஈசானியதெருவில் உள்ள காமராஜர் அவன்யூ பார்க்கில் ரூ. 52 லட்சம் மதிப்பீட்டில்சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தப்பணியினையும் நேரில் பார்வையிட்ட ஆய்வு செய்தார். பின்னர் வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள ஒருதனியார் தங்கும் விடுதியில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வர்த்தகம் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மகாபாரதி தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம் )வெற்றிவேல் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பாளர் அமுதவல்லி கலந்து கொண்டு வேளாண் துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், உழவர்கள் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை சந்தையில் எவ்வாறு விற்பனை செய்வது அதற்கு தேவையான உதவிகளை அரசு எவ்வாறு செய்கின்றது என்பது குறித்து சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தில் உதவி கலெக்டர் அர்ச்சனா, ஊரக வளர்ச்சித் துறை இணை இயக்குனர் ஸ்ரீலேகா, செயற்பொறியாளர்கள் செந்தில்குமார், மஞ்சுளா, நகராட்சி பொறியாளர் சித்ரா, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி மன்றதலைவர் பூங்கொடி அலெக்சாண்டர், திமுக மாவட்ட பொருளாளர் அலெக்ஸாண்டர் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர். முடிவில் வேளாண் அலுவலர் கிருத்திகா நன்றி கூறினார்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அரசு மருத்துவமனையில் மே 28 உலக பட்டினி தினத்தை முன்னிட்டு விஜய் மக்கள் இயக்கத்தின் பொது செயலாளர் புரூஸ்லி ஆனந்த் தமிழகம் முழுவதும் ஏழை எளியவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளதை அடுத்து சீர்காழி அரசு மருத்துவமனை வளாகத்தில் விஜய் மக்கள் இயக்கம் சார்பாக மதிய உணவு வழங்கினர். இதில் மயிலாடுதுறை மாவட்ட தொண்டர் அணி சார்பாக 500-க்கும் மேற்பட்டோருக்கு பிரியாணி வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் விஜய் மக்கள் இயக்கத்தினர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநில பொதுப்பணித்துறை மற்றும் சுற்றுலாத்துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் நேற்று அரசு முறை பயணமாக காரைக்கால் வருகை புரிந்தார். பின்னர் மதகடியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் நிர்வாக வலாகத்தில் மீன்வளத் துறை தொடர்பான மத்திய மாநில அரசின் திட்டங்கள் வளர்ச்சி பணிகள் குறித்தும் மற்றும் இந்த நிதியாண்டிற்கான சட்டசபையில் முதல்வர் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டன. இந்நிகழ்வில் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம், நிரவி – திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன், மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் மேலும் இணை இயக்குனர் (மீன்வளத்துறை) மற்றும் துணை இயக்குனர் மீன்வளத்துறை மேலும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் மீன்வளத்துறை ஆய்வாளர்கள் மேலும் அனைத்து பகுதியைச் சேர்ந்த கிராம மீனவ பஞ்சாயத்தார்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



நேற்று அரசு முறை பயணமாக காரைக்காலுக்கு வருகை புரிந்த புதுச்சேரி மாநிலத்தின் பொதுப்பணித்துறை, சுற்றுலாத்துறை, மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலன் துறை அமைச்சர் லட்சுமி நாராயணனுக்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சால்வை அணிவித்து வரவேற்றார்.

### சீர்காழி அருகே கன மழையுடன், சூறைக்காற்று வீசியதால்

# வீட்டின் மேற்கூரை காற்றில் பறந்தது, மின்கம்பங்கள் சாய்ந்தது





சீர்காழி,மே,29

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சுற்றுவட்டாரம் முழுவதும் கடந்த சில நாட்களாக அதிக அளவில் வெயிலின் தாக்கம் அதிகளவில் ஏற்பட்டு மக்களை வாட்டிய நிலையில், திடீரென மாலை நேரம் கருமேகம் சூழ்ந்தது.

இதனால் சீர்காழி அருகே கீழ வாடி, வடரங்கம்,மாதிரிவேளூர், பனங்காட்டான்குடி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன் தினம் மாலை பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.

அப்போது வீசிய சூறைக்காற்றால் கீழவாடி கிராமத்தில் ரங்கராஜன் வீட்டில் மேல் பகுதியில் போடப்பட்டிருந்த தகரத்திலான கூரை முற்றிலும் சேதம் அடைந்து காற்றில் தூக்கி வீசப்பட்டது.

வீட்டின் கூறை பெயர்ந்து சாலையில் விழுந்தது. இதேபோல அந்த பகுதியில் உள்ள 10 வீடுகளில் கூரையில் மரங்கள் சாய்ந்தது. மற்றும் 2 மின்கம்பங்கள் சாய்ந்தும் தரையில் விழுந்ததால் முற்றிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு வீடுகள் பாதிக்கப்பட்ட மக்கள் உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும், சாய்ந்த மின் கம்பங்களை நிமிர்த்தி மின்சாரம் விரைந்து வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்

# போலீசாரை கண்டித்து காவல் நிலையம் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்



சீர்காழி,மே,29

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி காவல் நிலையம் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சீனிவாசன் தலைமை தாங்கினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஸ்டாலின், துரைராஜ், கேசவன், அசோகன் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் சாமுவேல்ராஜ் காவல்துறையை கண்டித்து கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் கொள்ளிடம் ஒன்றியம் புளியாந்துரை ஊராட்சி மன்றதலைவர் நேதாஜிமீது போடப்பட்ட வழக்கை திரும்ப பெற வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடி மக்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதியை முறைகேடாக பயன்படுத்துவதின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பஞ்சாயத்து விதிகளை பின்பற்றாமல் ஊராட்சி மன்ற தலைவர்களின் அதிகாரங்களை பறிக்கும் செயல்களை கண்டித்தும், கடந்த வாரம் மக்களுக்கு போராடிய ஊராட்சி மன்ற தலைவர் மீது தாக்குதல் நடத்திய காவல்துறையின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

இந்தஆர்ப்பாட்டத்தில் கட்சி நிர்வாகிகள் சிம்சன், மாரியப்பன்,ரவிச்சந்திரன், விஜய், சுந்தரலிங்கம், வெண்ணிலா, மக்கள் அதிகார தலைவர் ரவி, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

# ஆசிரியர் பணியிட மாறுதல் கொள்கையை, காரைக்கால் ஆசிரியர் சங்கங்களையும் அழைத்து அமைச்சர் பேச வேண்டும்

## காரை பிரதேச அரசு ஊழியர் சம்மேளனம் கோரிக்கை



காரைக்கால், மே,29

புதுச்சேரி, கல்வித்துறையில் பணியாற்றி வரும் ஆசிரியர்களின் பணியிட மாறுதல் கொள்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம், புதுச்சேரியில் கல்வி அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் கடந்த வாரம் இரண்டு முறை நடைபெற்றது. இக்கூட்டத்தில், புதுச்சேரி பகுதி ஆசிரியர் சங்கங்களை மட்டும் அழைத்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. காரைப் பகுதி ஆசிரியர் சங்கங்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப் பட்டுள்ளனர் என கூறப்படுகின்றது

புதுச்சேரி மாநிலத்தில், இரண்டாவது பெரிய மாவட்டமாக உள்ள காரைக்காலில் சுமார் 1000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர், அவர்களில் 200 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் புதுச்சேரி பகுதியை சார்ந்தவர்கள். ஏற்கனவே, காரைக்கால் பகுதியில் ஏராளமான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது என அரசுக்கு பலமுறை தெரிவித்தும், காலி பணியிடங்களைநிரப்பஅரசு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில், தற்பொழுது வெளிவந்த பனிரெண்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாணவர்களின் தேர்வு விகிதம் மிகவும் குறைந்த வண்ணமும், மதிப்பெண்களும்குறைந்து எடுத்துள்ளனர் . இதற்கு முழுக்க முழுக்க காரணம் ஆசிரியர் பற்றாக்குறையும், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் சிலர் இரு பள்ளிகளில் பணியாற்றுவதே ஆகும்.

இந்நிலையில், ஆசிரியர்கள் பணியிட மாறுதல் கொள்கை வகுக்கும் போது காரைக்கால் பகுதியை சார்ந்த ஆசிரியர் சங்கங்கள் புறக்கணிக்கப்படுவது என்பது மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது.காரைப்பகுதி தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகிறது என அரசியல் கட்சிகளும், சமூக ஆர்வலர்களும் கூறிவரும் நிலையில், மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற ஆசிரியர் நியமிப்பதிலும், பணியிட மாறுதல் செய்வதிலும் புறக்கணிப்பு என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும்செயலாகும். இது சம்பந்தமாக, காரைக்கால் ஒருங்கிணைந்த ஆசிரியர் நலச்சங்கம் சார்பாக அரசுக்கு கோரிக்கையும் விடுத்துள்ளனர் மற்றும் காரைக்கால் முதன்மை கல்வி அதிகாரி அவர்களையும் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

ஆகவே, கல்வி அமைச்சர் உடனடியாக காரைக்கால் பகுதியை சேர்ந்த ஆசிரியர் சங்கங்களையும் அழைத்து பேசி, திருத்தப்பட்ட ஆசிரியர் பணியிட மாறுதல் கொள்கையை வெளியிட வேண்டுமென காரை பிரதேச அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.என காரைப் பிரதேச அரசு ஊழியர் சங்கங்களின் சம்மேளனம். பொதுச் செயலாளர் எம்.ஷேக் அலாவுதீன் தெரிவித்துள்ளார்.

# மகாத்மா காந்திக்கு பதிலாக சாவர்க்கர் பாடம் டெல்லி பல்கலைக்கழகத்தில் சர்ச்சை



புதுடெல்லி , மே .29–

டெல்லிபல்கலைக்கழக இளங்கலை(பி.ஏ.)அரசியல் அறிவியல் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 5-வது செமஸ்டரில் மகாத்மா காந்தி குறித்து ஒரு பாடம் உள்ளது.இதைரத்துசெய்ய பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதற்குபதிலாகசாவர்க்கர் குறித்த பாடத்தை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதேநேரம் மகாத்மா காந்தி குறித்த பாடம் 7-வது செமஸ்டருக்கு மாற்றப்பட்டு உள்ளது. இதனால் 3 ஆண்டு பட்டப்படிப்பை தேர்வு செய்யும் மாணவர்கள், காந்தி குறித்த பாடத்தை படிக்க இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது. இது தொடர்பாக டெல்லி பல்கலைக்கழகத்தின் கல்விக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

பல்கலைக்கழக நிர்வாக கவுன்சில் இதற்கு ஒப்புதல் அளித்தால், இது அமல்படுத்தப்படும். டெல்லி பல்கலைக்கழகத்தின் இந்த நடவடிக்கைக்கு ஒரு பிரிவு ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. கல்வியை காவிமயமாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# தென்காசியில் புதிய தமிழகம் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி, மே .29–

தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் பூரண மதுவிலக்கை அமல்படுத்தக் கோரி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநில இளைஞரணிதலைவர் ஷியாம் கிருஷ்ணசாமி தலைமை வகித்து ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து கண்டன உரை ஆற்றினார்.

இதில் மாநில அரசை கண்டித்து பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன, இந்நிகழ்ச்சிக்கு தொகுதி செயலாளர் மூர்த்தி பாண்டியன், நகர செயலாளர் சிவசாமி,ஒன்றிய துணைச் செயலாளர் பாபு தேவேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இணைச் செயலாளர் கிருஷ்ண பாண்டியன் வரவேற்புரை ஆற்றினார், மாநில துணை கொள்கை பரப்பு செயலாளர் குணா, மாவட்ட இணை செயலாளர் தங்கபாண்டியன், மாவட்டச் செயலாளர் ராசையா,இணைச் செயலாளர் செல்வராஜ், ராஜா, குமார், திருமலைக் குமார், ஜெயச்சந்திரன், உள்ளிட்ட பலர் கண்டன உரை ஆற்றினர், முடிவில் ஒன்றிய செயலாளர் எஸ். பி.சுரேஷ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# மேட்டூர் அரசு மீன் பண்ணையில் இருந்து கேரளாவிற்கு 15 லட்சம் மீன் குஞ்சுகள் அனுப்பி வைப்பு



மேட்டூர் , மே .29–

மேட்டூர் அரசு மீன் குஞ்சு உற்பத்தி, வளர்ப்பு பண்ணையில் இருந்து கேரளாவிற்கு 15 லட்சம் நுண்மீன் குஞ்சுகள் அனுப்பி வைக்கப்பட்டதாக மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேட்டூர் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் சார்பில் செயல்பட்டு வரும் மீன் குஞ்சு உற்பத்தி, வளர்ப்புப் பண்ணையில் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. அதன்படி, மேட்டூர் அரசு மீன் குஞ்சு உற்பத்தி, வளர்ப்புப் பண்ணையில் கட்லா, ரோகு, மிர்கால், சாதா கெண்டை உள்ளிட்ட மீன்களின் வளத்தை பெருக்கிடும் பணியில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை ஆண்டுதோறும் ஜூலைதொடங்கி,அடுத்த ஆண்டு ஜூன் வரை சீரான இடைவெளியில் மேட்டூர் அணையில் விடப்படுகின்றன.

அதேபோல், ஒவ்வொருமாவட்டத்தின் மீன் வளத்துறைக்கும், அண்டை மாநிலத்திற்கும் மீன் குஞ்சுகள் வழங்கப்படுகிறது. தற்போது,முதற்கட்டமாக, கேரளாவுக்கு 15 லட்சம் நுண்மீன் குஞ்சுகளும், வேலூர் மாவட்டத்திற்கு 7.52 லட்சம் நுண்மீன், இளமீன் குஞ்சுகளும் மீன்வளத்துறை அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மீன்வளத்துறை அதிகாரிகள் கூறுகையில், ''கட்லா, ரோகு, மிர்கால், சாதா கெண்டை உள்ளிட்ட மீன்கள் ஜீன், ஜீலை, ஆகஸ்ட் மாதங்களில் இன முதிர்ச்சியடைந்து இனப்பெருக்கம் செய்யும். கேரளாவில் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய தேவையான வசதிகள் இல்லாததால் மேட்டூர் அரசு மீன் குஞ்சு உற்பத்தி, வளர்ப்புப் பண்ணையில் இருந்து ஆண்டுதோறும் குறிப்பிட்ட இடைவெளியில் மீன்குஞ்சுகளை வாங்கிச் செல்கின்றனர். அதன்படி, கேரளாவுக்கு 15 லட்சம் கட்லா, ரோகு, மிர்கால் நுண்மீன் குஞ்சுகள் அனுப்பிவைக்கப்பட்டன. அதேபோல், வேலூர் மாவட்டத்திற்கு 6 லட்சம் நுண்மீன் குஞ்சுகள், 1.52 லட்சம் இளமீன் குஞ்சுகள் அனுப்பி வைக்கப்பட்டன'' என தெரிவித்தனர்.

# உளவுத்துறை சிறப்பு சப்–இன்ஸ்பெக்டர் ஜி.பாஸ்கர் பணி நிறைவு பாராட்டு விழா நிகழ்ச்சி தச்சூரில் நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, மே29–

திருவள்ளூர் மாவட்டம்,ஆரணி மற்றும் கவரப்பேட்டை ஆகிய காவல் நிலையங்களில் உளவுத்துறை போலீஸ் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருபவர் ஜி.பாஸ்கர் ஆவார். திருமணமான இவருக்கு சோபா என்ற மனைவியும், ஜெகதி,பூஜா என இரண்டு மகள்கள் உள்ளனர்.

இவர் 25.05.1988-ம் ஆண்டுஇரண்டாம்நிலை காவலராக காவல்துறை பணியில் சேர்ந்தார். காவல்துறையில் 35 ஆண்டுகள் பணியாற்றிய இவர் 31.05.2023 புதன்கிழமை அன்று வயது மூப்பின் காரணமாக பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். இந்நிலையில்,இன்று அவருக்கு தச்சூர் கிராமத்தில் உள்ள பி.ஆர்.பி கிராண்ட் தனியார் திருமண மண்டபத்தில் பணி நிறைவு பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன், கும்மிடிப்பூண்டி காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வடிவேல்முருகன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

அனைவரையும் ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர், சிறப்புசப்-இன்ஸ்பெக்டர் ராஜ்குமார் ஆகியோர் வரவேற்றனர். இதில்,கும்மிடிப்பூண்டி துணை போலீஸ் சூப்பிரண்டு கிரியாசக்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பணி ஓய்வு பெறும் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கரின் பணியை பாராட்டி சிறப்புரை ஆற்றி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ,ஆரணி,பெரியபாளையம்,கவரப்பேட்டை, கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, ஆரம்பாக்கம், மீஞ்சூர், சோழவரம் உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் காவல்துறையினர் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தஅரசியல்கட்சியின் முக்கிய பிரமுகர், அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், உற்றார்-உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்.

நிகழ்ச்சியை திருக்கண்டலம் ஊராட்சி, அண்ணா நகர் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் பாரதிதாசன் தொகுத்து வழங்கினார். முடிவில்,ஆரம்பாக்கம் காவல் நிலைய சிறப்பு சப் இன்ஸ்பெக்டர்கள் ரமேஷ்,முருகன் நன்றி கூறினர்.

# அறந்தாங்கியில் கூடைபந்து வீரர்களுக்கு வணிகர் பேரவை ஊட்டசத்துணவு வழங்கல்



அறந்தாங்கி,மே.29-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி கூடைபந்து வீரர்களுக்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ஊட்டசத்துணவு வழங்கியது.

அறந்தாங்கி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் இயங்கி வரும் பைட்டிங் ஸ்டார்ஸ் கூடை பந்து கழகம் பல ஆண்டுகளாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கூடை பந்து பயிற்சி வழங்கி வருகிறது. ஒவ்வொரு பேட்ஜிலும் நூற்றுக்கணக்கான வீரர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவ்வாறு பயிற்சி பெற்றுவரும் கூடைபந்து வீரர்களுக்கு தொடர்ந்து ஐந்து வருடமாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ஊட்டசத்துணவு வழங்கி வருகிறது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாவட்ட தலைவர் வழக்கறிஞர் வரதராஜன் தலைமையில் கூடைபந்து பயிற்சியாளர் விஜி முன்னிலையில் மாவட்ட இணை செயலாளர் முபாரக் அலி அனைவரையும் வரவேற்றார்.

ஆவுடையார்கோவில் ஒன்றிய செயலாளர் பொன் துரை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஊட்டசத்துணவு வழங்கி மாணவ மணவிகளான வீரர்களை வாழ்த்தி பேசினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர்கள் வினாயக செந்தில்வேல், முத்துகாமாச்சி, துணை செயலாளர் வெங்கட், சட்ட ஆலோசகர் மணிமாறன், மூத்த உறுப்பினர் நாகராஜன், மாவட் இளைஞர் அணி செயலாளர் அசோக், துணை செயலாளர் ஐயப்பன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், அப்துல் நாசர், முத்துகிருஷ்ணன், குணாலன் நகர துணை செயலாளர்கள் ரபிக், சேக் நத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். இறுதியில் மாவட்ட பொதுச்செயலாளர் மலையப்பன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# அந்தமானில் நடந்த உலக ஹைக்கூ மாநாட்டில் கவிஞர் தங்கம் மூர்த்திக்கு 'தமிழ் கவிதைப் பேரொளி' வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது




புதுக்கோட்டை, மே.29-

அந்தமானில் நடைபெற்ற உலக ஹைக்கூ இரண்டாவது மாநாட்டில் புதுக்கோட்டை கவிஞர் தங்கம்மூர்த்திக்கு ' தமிழ் கவிதைப் பேரொளி ' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. விருதினை அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல். மூர்த்தி வழங்கினார், கவிஞர் மு. முருகேஷ், கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன், அந்தமான் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் கணேசன், கவிஞர் பா. தென்றல் ஆகியோர் உடனிருந்தனர்.

தூண்டில் ஹைக்கூ கவிதை இதழும், இனிய நந்தவனம் மாத இதழும், அந்தமான் தமிழர் சங்கமும், தமிழ் ஹைக்கூ கவிதை இயக்கமும் இணைந்து நடத்திய 'தமிழ் ஹைக்கூ இரண்டாவது உலக மாநாடு' அந்தமானில் நடைபெற்றது. பல புதிய கவிஞர்களிடத்தில் வியக்கத்தக்க மாற்றங்களை அம்மாநாடு விதைத்திருக்கிறது, ஏராளமான பேராளர்கள் பெரும் ஆர்வத்தோடு இம் மாநாட்டில் பங்கேற்றது மகிழ்ச்சியை தந்தது. கடல் கடந்து வந்து தமிழ் வளர்க்கும் அந்தமான் தமிழர் சங்க அரங்கில் இம்மாநாடு திட்டமிட்ட நேரத்தில் தொடங்கி, திட்டமிட்டவாறு தொடர்ந்து, மிகச்சரியாக நிறைவுற்றது.

மாநாடு முடிந்ததற்குப் பிறகும் கூட அந்த அரங்கை விட்டு எழ முடியாமல் ஏக்கத்தோடு அமர்ந்திருந்த கவிஞர்களை காண முடிந்தது. கவிஞர்கள் எப்போதுமே அழகோடும் உணர்வோடும் தன்னை இணைத்துக் கொண்டிருப்பவர்கள். அழகு நிறைந்த அந்தமான் தீவில் இந்த உணர்வுகளுக்கு செயல் வடிவம் தந்து மாநாட்டுத் திட்டமிடலில் தேர்ச்சி பெற்ற தன் அனுபவத்தால் துளியும் பிசகாத உண்மைத் தன்மையோடு இம் மாநாட்டை சிறப்பாக நடத்தினார் நந்தவனம் சந்திரசேகரன். அவருக்கு உற்ற துணையாக, ஊக்க மருந்தாக முழு ஒத்துழைப்பை வழங்கி முன் நின்று வென்றார் கவிஞர், பால சாகித்திய பிரஸ்கர் விருதாளர் மு. முருகேஷ் மாநாட்டில் ஹைக்கூக்கள் தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு, செல்லும் பாதை என பல தளங்களில் விவாதங்கள் நடந்தன. ஒவ்வொரு பேச்சிலும் ஐந்தாறு ஹைக்கூக்கள் மின்னல்களைப் போல் பளிச் பளிச்சன வெளிச்சத்தை பரப்பின. ஹைக்கூ தனக்குத் தந்த அனுபவங்களை பலரும் பகிர்ந்து கொண்டனர்.

அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல். மூர்த்தி விழாவில் பங்கேற்று விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார், கவிஞர் பா. தென்றல் நிகழ்வை கொஞ்சம் கூட தொய்வில்லாமல் தொகுத்து வழங்கினார், ஒவ்வொரு முறை அவர் ஒலிபெருக்கி முன் வரும்போதும் ஒரு ஹைக்கூவை சொல்லியே தொடங்கினார். ஹைக்கூவை கொண்டாடத் தெரிந்தவர்கள் கூடியிருந்த அவை என்பதால் எல்லா ஹைக்கூக்களும் தனக்குரிய கைதட்டல்களைப் பெற்றன. சொந்த ஊரில் விழா நடத்தவே நாக்கு தள்ளுகிற வேலையில் கடல் கடந்து வந்து அந்தமானில் மிக நேர்த்தியாக இந்த மாநாட்டை நடத்திய பெருமை கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன், கவிஞர் மு.முருகேசுக்கும் உண்டு என்று விழா கமிட்டியாளர்கள் தெரிவித்தனர்.

# அறந்தாங்கி அருகே வரதட்சணை கேட்டு கொடுமை பெண் பலி இறந்த பெண்ணின் உறவினர்கள் சாலைமறியல்



அறந்தாங்கி, மே.29-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் திருமணமான 6 வருடத்தில் இறந்த பெண்ணின் உறவினர்களான மாமியார், கணவரின் தம்பி ஆகியோரை கைது செய்யக்கோரி சாலைமறியல் செய்தனர்.


அறந்தாங்கி தாலுகா செங்கமாரி கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜா இவரது மனைவி மகாலட்சுமி இருவருக்கும் திருமணம் நடந்து 6 ஆண்டுகள் ஆகி நான்கு வயதில் ஆண் குழந்தை உள்ளது. இந்நிலையில் வீட்டில் பூச்சி மருந்து அருந்திய மகாலட்சுமி ஆபத்தான நிலையில் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மகாலட்சுமியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். உடல் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் உடல் கூறு ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறி மகாலட்சுமியின் உறவினர்கள் அறந்தாங்கி பட்டுக்கோட்டை சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து உறவினர்கள் கூறுகையில் திருமணம் ஆகி 6 வருடங்களாக தொடர்ந்து கணவர் வீட்டில் மாமியார் மற்றும் கணவரின் சகோதரர் ஆகியோர் சேர்ந்து தொடர்ந்து வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாகவும் மகாலட்சுமி ஏற்கனவே கூறியுள்ளார். இதுகுறித்து பெண் வீட்டார் பலமுறை கணவர் வீட்டாரோடு சமாதான பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் தான் மகாலட்சுமி இறந்துள்ளார். இதில் எங்களுக்கு பலத்த சந்தேகம் உள்ளது. விசம் அருந்தி தற்கொலை செய்துக்கொள்ளும் அளவிற்கு மகாலட்சுமி கோழை இல்லை, எனவே மாமியார் மற்றும் கணவரின் தம்பி ஆகியோரை கைது செய்து விசாரித்து தக்க நியாயம் வழங்க வேண்டும். பிரேத பரிசோதனை செய்யும் போது வீடியோ கவரேஜ் செய்ய வேண்டும் என தெரிவித்தனர். அறந்தாங்கி காவல்துறையினர் மற்றும் வருவாய் துறையினர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

இதனால் அறந்தாங்கி பட்டுக்கோட்டை சாலையில் அரசு பொது மருத்துவமனை எதிரில் ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே விஷ வண்டு கடித்ததில் விஏஓ உயிரிழப்பு



ஸ்ரீவில்லிபுத்தூர், மே.29-

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே விஷ வண்டு கடித்ததில் விஏஓ ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே முல்லை நகர் புதுத்தெருவை சேர்ந்தவர் இந்திராகாந்தி(54). இவரது கணவர் தங்கராஜ். இவர்களுக்கு முத்துமீனா என்ற மகளும், அரவிந்த் என்ற மகனும் உள்ளனர். அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றிய தங்கராஜ் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் உயிரிழந்து விட்டார். இந்திராகாந்தி ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மல்லி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தார்.

நேற்று முல்லை நகரில் உள்ள தனது வீட்டில் தண்ணீர் தொட்டி நிறைந்து விட்டதா என பார்ப்பதற்காக மாடிக்கு சென்றார். அப்போது இந்திரா காந்தியை விஷ வண்டு கடித்துள்ளது. இதையடுத்து அவரை ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சிவகாசி தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது, இந்திராகாந்தி உயிரிழந்தார். இதுகுறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பேருந்தில் பயணி தவற விட்ட 20 சவரன் நகையை ஒப்படைத்த அரசு ஊழியர்கள்



புதுக்கோட்டை , மே.29-

புதுக்கோட்டையில் அரசு பேருந்தில் பயணி தவற விட்ட 20 சவரன் நகையை ஒப்படைத்த அரசு பேருந்தின் நடத்துனர் உள்ளிட்ட பணியாளர்களின் செயல் மக்கள் மத்தியில் பாராட்டுகளை பெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் பகுதியைச் சேர்ந்தவர் கிளைட்டன். இவர் சென்னையில் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றி வரும் சூழலில் நேற்று காலை சென்னையில் இருந்து கீரனூருக்கு வந்துள்ளார். சென்னையில் இருந்து திருச்சி வந்த அவர் அதன் பின் திருச்சியில் இருந்து முதுகுளத்தூர் செல்லும் அரசு பேருந்தில் எறி கீரனூரில் இறங்கி உள்ளார். அவர் கீரனூரில் இறங்கிய பின்பு தான் தான் கொண்டு வந்த பேக்கை பேருந்திலேயே விட்டு விட்டு கீழே இறங்கியது தெரிய வந்தது. உடனடியாக இதுகுறித்து அவர் புதுக்கோட்டை புறநகர் போக்குவரத்து கழக அலுவலர்களுக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் உடனடியாக சம்பந்தப்பட்ட பேருந்தின் நடத்துனரை தொடர்பு கொண்ட போக்குவரத்து கழக அலுவலர்கள் கீரனூரில் பயணி விட்டுச் சென்ற பேக் பேருந்திலேயே உள்ளதாகவும் அதனை பத்திரமாக எடுத்து வைக்குமாறும் அறிவுறுத்திள்ளனர். இதனைக் கேட்ட பேருந்தின் நடத்துனர் ஜோசப் பால்ராஜ் பயணி கிளைட்டன் விட்டுச்சென்ற பேக்கை எடுத்து பாதுகாப்பாக வைத்துள்ளார்.

பின்னர் அந்த பேருந்து மீண்டும் புதுக்கோட்டை வந்த போது போக்குவரத்து கழக புறநகர் மேலாளர் தில்லைராஜ் முன்னிலையில் பேருந்தின் ஓட்டுனர் கார்த்திகேயன் நடத்துனர் ஜோசப் பால்ராஜ் ஆகியோர் அந்த பேக்கை நகர காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மூலம் பயணி கிளைட்டனிடம் ஒப்படைத்தனர். பேக்கை பெற்றுக் கொண்ட கிளைத்தன் அதனை திறந்து பார்த்தபோது அவர் வைத்திருந்த 20 பவுன் தங்க நகை மற்றும் துணிமணிகள் உள்ளிட்ட பொருட்கள் பத்திரமாக இருப்பது தெரிய வந்தது. இதனையடுத்து அவர் அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர் நடத்துனர் மேலாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

புதுக்கோட்டையில் பயணித்தவறவிட்ட 20 சவரன் நகை இருந்த பேக்கை பத்திரமாக போக்குவரத்து கழக ஊழியர்கள் உரியவரிடமே ஒப்படைத்தநிகழ்வுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

# உலக பட்டினி தினத்தையொட்டி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் அரியலூரில் அன்னதானம் வழங்கப்பட்டது



அரியலூர், மே. 29-

விஜய் மக்கள் இயக்கம் சார்பில் அரியலூரில் அன்னதானம் வழங்கப்பட்டது. இது பற்றி விஜய் மக்கள் இயக்கத்தின் அரியலூர் நகர துணைத் தலைவர், சுரேந்திரன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

உலக பட்டினி தினத்தை (மே 28)முன்னிட்டு, திரைப்பட நடிகர் விஜய் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதிகளிலும், "தளபதி விஜய் ஒரு நாள் மதிய உணவு சேவையகம்" என்ற திட்டத்தின் அடிப்படையில், அரியலூர் நகர தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் ஏ. எஸ். மருத்துவமனை எதிரில், மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சியினை, மாவட்டத் தலைவர் சிவா தலைமையேற்று துவக்கி வைத்தார். நகரத் தலைவர் பாலா, நகரச் செயலாளர் ஜி.கே.ஹரி கிருஷ்ணன், நகர துணைத் தலைவர் சுரேந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் வழக்கறிஞர் அணி நிர்வாகி சித்திரக்கண்ணன், நகர துணை அமைப்பாளர் கிஷோர், நகர நிர்வாகிகள் ஹரி ,ஆகாஷ், யுவன், விஷ்ணு உள்ளிட்டோர் பங்கேற்ற இந்நிகழ்வில், 100க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அரியலூர் பேருந்து நிலையம், ரயில்வே கேட் உள்ளிட்ட பகுதிகளிலும், விஜய் மக்கள் இயக்கம் சார்பில், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



▸ உலக பட்டினி தினத்தை முன்னிட்டு மதுரை புறநகர் வடக்கு மாவட்ட தளபதி தலைமை மக்கள் இயக்கம் சார்பாக பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கினர், விஜய் அண்பன் கல்லணை தலைமையில் அரசு ராஜாஜி மருத்துவமனையில் மதிய உணவாக பொது மக்களுக்கு முட்டை பிரியாணி வழங்கும் விழா நடைபெற்றது, விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட இளைஞரணி தலைவர் தளபதி பிரியன், நடராஜன் ஆகியோர் அன்னதானத்தை தொடங்கி வைத்தனர், வடக்கு மாவட்ட மாணவரணி செயலாளர் செல்வா, நிர்வாகி சாம், கனிஷ் கன் மற்றும் பலர் கலந்து கொண்டனர், விழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட மாணவரணி தலைவர் தளபதி விஷால் செய்திருந்தார்.

# மேலகரத்தில் திமுக இளைஞரணி சார்பில் ஈராண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம்



தென்காசி, மே. 29-

தென்காசி மாவட்டம், மேலகரத்தில் திமுக இளைஞரணி சார்பில் மேலகரம்பேருந்துநிறுத்தம் அருகில்ஈராண்டுசாதனை விளக்க தெருமுனை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஒன்றியச்செயலாளர் அழகு சுந்தரம் தலைமை வகித்தார், மேலகரம் பேரூர் கழக செயலாளர் சுடலை, பேரூராட்சி மன்றத் தலைவர் வேணி வீரபாண்டியன், துணைத் தலைவர் ஜீவானந்தம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

குற்றாலம் பேரூராட்சி மன்ற உறுப்பினர் கிருஷ்ணராஜா வரவேற்புரை ஆற்றினார். தலைமை திமுக பேச்சாளர்கள் பசும்பொன் ரவிச்சந்திரன், செங்கை குத்தாலிங்கம், வழக்கறிஞர் வேலுச்சாமி, முத்துவேல் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்ச்சியில் பேரூர் கவுன்சிலர்கள் பூமாசம்மூகுட்டி, தங்கம்மாள், சுப்பிரமணியன், செல்வமணி, சிங்கத்துரை, நாகராஜ்சரவணார், பேரூர் நிர்வாகிகள் சலீம், கந்தசாமி, ரமேஷ் குமார், வேலுச்சாமி, கிட்டு என்ற கிருஷ்ணன், சண்முகம், சுந்தரம், ஈன முத்துப் பாண்டியன், வீரபாண்டியன், யாகவா சுந்தர், பாலசுப்பிரமணியன், கல்யாணிசுந்தரம், வேலு, வார்டு செயலாளர்கள் காசி விஸ்வநாதன், சுப்பிரமணியன், திருமலை நாதன், கணேசன், பகவதி ராஜ், ஆறுமுகம், வீரபாண்டியன், பூபதி, குத்தாலிங்கம், பாலசுப்பிரமணியன், குருசாமி, ஈஸ்வரன், மற்றும் நன்னை சுந்தர், சந்திரன், திருமலை, முருகன், பகவதிராஜ், மணி, ஆவின் முருகன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இதில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன, முடிவில் பேரூராட்சி மன்ற உறுப்பினர் கபிலன் நன்றி கூறினார்.

## மறு இணக்க விழா நிகழ்ச்சியில்

# பள்ளியின் வளர்ச்சிக்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கிய முன்னாள் மாணவர்கள்



கள்ளக்குறிச்சி, மே,29_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எலவனாசூர்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்திப்பு மறு இணக்க விழா நிகழ்ச்சி எலவனாசூர்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

கடந்த 2002-2004-ம் ஆண்டு பயின்ற மாணவ மாணவிகள் தற்பொழுது தனியார் மற்றும் அரசு துறைகளில் பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வருகின்ற நிலையில் 21-ஆண்டுகால பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் தாங்கள் படித்த, பணியாற்றிய பள்ளியில் அனைவரும் ஒன்று கூடி தங்களது கடந்த கால இனிமையான நிகழ்வுகளையும், தற்பொழுது உள்ள நிகழ்வுகளையும், தங்களது குடும்பத்துடன் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சிகளை தெரிவித்துக்கொண்டனர். மேலும் தங்களை நல்வழிப்படுத்திய பள்ளியின் வளர்ச்சிக்காக ஒரு லட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் மெய்யப்பன் மற்றும் முன்னாள் தலைமை ஆசிரியர்கள் பாவாணன், தென்னரசு, ஊராட்சி மன்றத் தலைவர் நந்தகுமார், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சம்சாத், ஒன்றிய குழு உறுப்பினர்கள் மனோகரன், சர்தார்கான், உடற்கல்வி ஆசிரியர் சாமிதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# புதிய நாடாளுமன்றத்தை திறந்து வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி

# மல்யுத்த வீரர்கள் கைது: செங்கோல் முதல் நாளே வளைந்து விட்டது





# தொடரும் சோதனை செந்தில் பாலாஜி ஆதரவாளர்கள் அப்செட்


| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 29.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**சிவயோக சுவாமி** , ஈழத்துச் சித்தர் (பி.1872) (இ.1964)



**தருமபுரம் ப. சுவாமிநாதன்** , தமிழிசைத் தேவாரப் பேரறிஞர் (பி.1923) (இ.2009)



**ஆறுமுகன் தொண்டமான்** , இலங்கை மலையக அரசியல்வாதி, தொழிற்சங்கத் தலைவர் (பி.1964) (இ.2020)



## இன்றைய நினைவு நாள்

**டொன் பாரன் ஜெயதிலக்க** , இலங்கை அரசியல்வாதி (பி.1868) (இ.1944)



**சரண் சிங்** , இந்தியாவின் 5வது பிரதமர் (பி.1902) (இ.1987)



**சோ. கிருஷ்ணராஜா** , இலங்கை வரலாற்றாளர், மெய்யியல் பேராசிரியர் (பி.1947) (இ.2009)



**ஐக்கிய நாடுகளின் அமைதி காப்போருக்கான சர்வதேச நாள்**